# முன்னுரை

## “விண்ணகத் தந்தை தன் குழந்தைகளோடு உரையாடுகிறார்”

**(விண்ணகத் தந்தை அன்னை யூஜீனியாவுக்கு கொடுத்த செய்திகள்)**

“எனக்கென ஒரு நாள் அல்லது ஒரு ஞாயிற்றுக் கிழமையை ஒதுக்கி, அந்த நாளில் என்னை சிறப்பாக மகிமைப்படுத்த ஒரு விழா எடுத்து அர்ப்பணிக்க வேண்டுமென நான் விரும்புகிறேன். அந்த விழாவை “அகில உலக மாந்தரின் தந்தையாம் இறைவன்” என்று பெயரிட்டு அழைக்கப்பட விரும்புகிறேன். இந்த சிறப்பு பக்தி முயற்சியை ஒரு ஞாயிற்றுக் கிழமையில் நீங்கள் அனுசரிக்க விரும்பினால் அது, ஆகஸ்ட் மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமையாக இருக்க வேண்டுமென நான் ஆசிக்கிறேன். ஒரு வேளை நீங்கள் வாரத்தின் ஒரு நாளில் இவ்விழாவை கொண்டாட விரும்பினால், அதுவும் அதே மாதத்தின் ஏழாம் நாளாக இருக்க வேண்டும் என நான் ஆசிக்கிறேன்.

மேலும், நான் என் சிறிய அன்பு மகளுக்கு வெளிப்படுத்தவிருக்கும் என் உருவ படத்தை, ஒவ்வொருவரின் வீட்டின் முதன்மையான இடத்தில் அரியணை ஏற்ற வேண்டுமென விரும்புகிறேன்.

இவ்வாறு ஒவ்வொரு குடும்பமும், தங்கள் குடும்பத்தை எனது பாதுகாவலில் வைத்து, என் அன்பையும் உடனிருப்பையும் அனுபவிக்க வேண்டுமென விரும்புகிறேன். இவ்வாறாக, தினம் தினம், வெகு சுலபமாக என்னை ஒவ்வொரு குடும்பமும் மகிமைப்படுத்த முடியும். ஒவ்வொரு குடும்பமும் தங்களின் சுக, துக்கங்களையும், உணர்வுகளையும், தேவைகள், பணி, துன்ப துயரங்களையும் என்னோடு பகிர்ந்து கொள்வதோடு, அவர்களது வெற்றியிலும் மகிழ்ச்சியிலும் நான் பங்கெடுத்து அவர்களோடு உடனிருக்க விரும்புகிறேன். ஏனெனில், தன் பிள்ளைகளின் ஒவ்வொரு தேவையையும், உணர்வுகளையும் அவர்களின் தந்தை முழுமையாக அறிந்திருக்க வேண்டுமல்லவா? ஆம், நிச்சயமாக, நான் அவர்களோடு குடியிருப்பதால் அனைத்தையும் அறிந்திருக்கிறேன். ஆனால் நான் எளிமையை நேசிக்கிறேன். அதனால், சூழ்நிலைக்கும், வயதுக்கும் ஏற்றபடி நான் என்னையே மாற்றிக் கொள்கிறேன். ஆம், குழந்தைகளுக்கு குழந்தையாகவும், இளைஞர்களுக்கு இளைஞராகவும்,

வயதில் மூத்தவர்களுக்கு மூத்தவராகவும் என்னையே மாற்றிக் கொள்கிறேன். அப்பொழுதுதான் எல்லா வயதினரும், நான் அவர்களின் மீட்புக்காகவும் எனது மகிமைக்காகவும், அவர்களுக்கு நான் அறிவுறுத்த விரும்புவதை எளிதில் புரிந்து கொள்ள முடியும்.

இதுவரை, பயமுறுத்தும் ஒரு வயதான கிழவனைப் போல் என்னை இம்மனிதர்கள் படங்களிலும், புத்தகங்களிலும் சித்தரித்துள்ளார்கள் அல்லவா. ஆனால் உண்மையில் நீங்கள் என்னை அந்த உருவத்தில் நினைத்துப் பார்க்காதீர்கள். அது உண்மை அல்ல. நான் என் அன்பு மகனையும், என் தூய ஆவியாரையும் விட இளையவரோ அல்லது முதியவரோ அல்ல என்பதே உண்மை.

# அன்னை யூஜீனியா விண்ணகத் தந்தைக்கு ஒப்புக் கொடுத்த தேர்ந்தெடுக்கப்பட்ட செபங்கள்

## அழகிய செபம்

என் அன்புத் தந்தையே இறைவா ! உம் மீது கொண்டுள்ள அன்பின் வெளிப்பாடாக என்னை முழுவதும், என் ஒவ்வொரு இதயத் துடிப்பையும், உமக்கு காணிக்கையாக்குகிறேன். உம்மை மனம் நோகச் செய்த என் செயல்களுக்காக மிகவும் மனம் வருந்துறேன். உம்மை அன்பு செய்வதிலிருந்தும், உம்முடன் செபத்தில் நிலைத்திருப்பதிலிருந்தும், ஒரு கனமும் பிரியாமல் இருக்க விரும்புகிறேன்.

ஒருவேளை, நான் நோய் நொடியினாலோ, அல்லது எதிர்பாராமல் ஏற்படும் விபத்தினாலோ, அல்லது மாரடைப்பு, அறுவை சிகிச்சை போன்ற சூழ்நிலைகளில் சுய நினைவிழந்து, உம்மிடம் செபிக்க முடியாத தருணங்களில், என் இதயத்துடிப்பையும் உயிர் மூச்சையும் என்னுடைய தற்போதைய அன்பின் செயல்பாடுகளின் முயற்சிகளின் தொடர்ச்சியாக உமக்குக் காணிக்கை ஆக்குகிறேன்.

ஓ நல்ல தந்தையே இறைவா, என் பாவங்கள், குற்றங்குறைகள் அனைத்திற்காகவும் நான் மிகவும் மனம் வருந்துகிறேன். என் இறப்பின் வேளையில் எனது இறுதி மூச்சை, என் ஆவியை உம்மிடம் ஒப்படைக்கும் அந்த இறுதித் தருணம் இவ்வுலகில் எனது அன்பின் கடைசி முயற்சியாக இருப்பதாக.

நான் உயிர்தெழும்போது, நீர் என் பெயரைச் சொல்லி என்னை முடிவற்ற விண்ணக வாழ்விற்கு வரவேற்பீர் என்ற நம்பிக்கையோடு என்னையே உமக்கு அர்ப்பணிக்கிறேன்.

அன்புத் தந்தையே நான் உம்மை மிகவும் அன்பு செய்கிறேன்.

– ஆமென்

**காலை செபம்**

அன்பு தந்தையே இறைவா, இந்தக் காலைப் பொழுதில், என்னையே உமக்கு அர்ப்பணமாக்குகிறேன். ஆம் தந்தாய், என் சொல், செயல், சிந்தனை அனைத்தையும் உமக்கே காணிக்கையாக்குகிறேன். என்னை முழுவதும், எனக்கு சொந்தமானது அனைத்தையும் உமக்கே அர்ப்பணிக்கிறேன். நான் உமக்கே சொந்தம். என்னிடம் இருப்பதெல்லாம் உம்முடையதே. இந்த புதிய நாள் முழுவதும் எனக்குத் துணையாக வாரும். இந்த நாள் முழுவதும் என்னை ஆசீர்வதித்து, உமது அன்பால் என்னை நிரப்பி, அமைதியிலும், மகிழ்ச்சியிலும் வாழ்ந்திட அருள்புரியும். இன்று நான் சந்திக்கும் ஒவ்வொருவரையும், என் இதயத்தில் நிரம்பியுள்ள உமது அன்பால் தொடச் செய்தருளும். அமைதியிழந்து தவிப்போருக்கு நான் உமது அமைதியின் கருவியாகச் செயல்பட்டு, துன்பத்தில் துடிக்கும் இதயங்களுக்கும், மனம் உடைந்த உள்ளங்களுக்கும், ஆறுதலாக இருக்க அருள்புரிவீராக. நான் சந்திக்கும் அனைவருக்கும் உமது அன்பை மகிழ்ச்சியைப் பிரதிபலித்து, நம்பிக்கையிழந்து வாடும் அனைவரின் இதயத்திலும் புதிய நம்பிக்கையை விதைக்க அருள்புரியும். தந்தையே இறைவா, உம் விருப்பப்படியே என்னைப் பயன்படுத்தும், நான் சந்திக்கும் அனைவரும், உம்மை அறிந்து, அன்பு செய்து உமக்கே பணிபுரிய, உம்மிடம் அழைத்து வர எனக்கு வரம் அருளும்.

எனது சொல்லிலும் செயலிலும் உமது அன்பை நான் பிரதிபலித்திட அருள்புரியும். உமது அன்பின் தீயினால் என்னை நிரப்பியருளும். எனது சுயநலம், நான் என்ற என் அகந்தை அனைத்தையும் சுட்டெரித்து சாம்பலாக்கிவிடும். உமது அரசுக்கு எதிரான மதிப்பீடுகளை எரித்து சாம்பலாக்கிடுவீராக. தந்தாய், என் கரத்தைப் பிடித்து என்னை வழி நடத்தும். என் வாழ்வில் இருளும், துயரும் நிறைந்த மேகங்கள் சூழும் வேளையில் நான் உமது பாதுகாப்பின் சிறகுகளுக்குள் அடைக்கலமாய் இருக்கிறேன் என்ற உணர்வினால் என் அச்சத்தைப் போக்கியருளும். தந்தாய், நான் தாழ்ச்சி, பொறுமை, நன்னயம் ஆகிய குணங்களில் வளர்ந்திடச் செய்வீராக. என் வாழ்வில் எல்லாம் நன்றாகவே நடக்கும்போது உம்மை மறவாமலும், எல்லாம் தலைகீழாக நடக்கும்போது உம்மீது குறைகூறி உம் மனதை நோகச் செய்யாமலும் இருப்பேனாக. நீர் என் மீது

வைத்துள்ள அளவற்ற அன்பில் முழு நம்பிக்கையோடும், உறுதியோடும் என்னுடைய காலை மன்றாட்டை உமக்கு அர்ப்பணிக்கிறேன்.

– ஆமென்.

**மாலை செபம்**

தந்தையே இறைவா ! இந்த நாளுக்காக நான் உமக்கு நன்றி கூறுகிறேன். நான் குழப்பத்தில் இருந்த போது எனக்கு உம் நேரிய வழிகளைக் காட்டி, சரியான முடிவெடுக்க வழிநடத்தியதற்காக உமக்கு நன்றி இறைவா. இந்த நாள் முழுவதும் உமது அன்பின் பாதுகாப்பிலே வைத்து எதிர்பாராமல் ஏற்படும் ஆபத்துக்கள், விபத்துக்களில் இருந்து என்னைப் பாதுகாத்தமைக்காகவும், குறிப்பாக என் ஆன்மாவை, தீயோனாகிய சாத்தானின் பிடியில் விழுந்துவிடாமல் பாதுகாத்த உம் கருணையை எண்ணி உமக்கு நன்றி கூறுகிறேன்.

**என் இனிய தந்தையே !**

- நீர் தந்த உமது அருளை முழுமையாக நான் பயன்படுத்தாமல் இருந்ததற்காகவும்
- இன்னும் முழுமையாக உம்மை அன்பு செய்யாததற்காகவும்
- இன்னும் அதிகமாக பிறருக்கு இரக்கம் காட்டாமல் வாழ்ந்ததற்காகவும்
- அகந்தையோடும், தற்பெருமையோடும் இன்று இருந்ததற்காகவும்
- எனது கடமையிலிருந்து தவறியதற்காகவும்
- உம் திருச்சித்தத்திற்கு கீழ்படியாமல் இருந்ததற்காகவும்
- பிறருக்கு முன்மாதிரிகை இல்லாமல் இருந்ததற்காகவும்
- என் குற்றங்குறைகளை திருத்திக் கொள்ளாமல் இருந்ததற்காகவும், மனம் நொந்து, வருந்தி உம்மிடம் மன்னிப்புக் கேட்கிறேன்.

தந்தையே இறைவா, நீர் எப்போதும் நிபந்தனையற்ற விதத்திலே என்னை அன்பு செய்கிறீர் என்பதையும், உம் பார்வையில்நிறைவை நோக்கிய என் முயற்சிகளில் நீர் என்றும் துணைபுரிகிறீர் என்பதையும் உணரச் செய்தருளும். நான் எந்த

சூழ்நிலையிலும் அவநம்பிக்கை அடைய விடாதேயும் என் அன்புத் தந்தையே, இதயத்தில் உம் மீது கொண்டுள்ள நிறைந்த அன்போடும், நன்றி, புகழ்ச்சி, ஆராதனை உணர்வுகளோடும், மன நிறைவுடன் உறங்கச் செல்கிறேன் என் இதய வேந்தனே.

**– ஆமென்.**

## இரவு செபம் (படுக்கைக்கு முன்)

தந்தையே இறைவா, உம் திருமகனாகிய இயேசுகிறிஸ்துவின் விலைமதிப்பற்ற திரு இரத்தத்தினால் என்னைக் கழுவியருளும். என் இதயம், ஆன்மா, ஆவி அனைத்திலும், என் உடலின் ஒவ்வொரு பகுதியிலும் அத்திரு இரத்தத்தைப் பொழிந்து என்னைக் கழுவி, தூய்மைப்படுத்தி, என்னை ஒரு புதிய படைப்பாக மாற்றியருளும். உமது தூய ஆவியானவரின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் என்னை வைத்தருளும். நீர் விண்ணக மாட்சியில் இருப்பது போலவே நான் உம்மை போற்றி, துதித்து, மகிமைப்படுத்துகிறேன் தந்தையே. – ஆமென். (செபத்தை மூன்று முறை சொல்லவும்)

## குணமளிக்கும் செபம்

வானகத் தந்தையே, உமது வல்லமையால் நான் படைக்கப்பட்டேன், நான் சுவாசிக்கும், ஒவ்வொரு மூச்சும், விழித்தெழும் ஒவ்வொரு அதிகாலையும், உயிர் வாழும் ஒவ்வொரு மணியின் ஒவ்வொரு வினாடியும், உமது ஆற்றலால் தான்.

தந்தையே, அதே வல்லமையால் இப்பொழுது என்னைத் தொடும். ஏனெனில், ஒன்றுமில்லாமல் என்னைப் படைத்த நீர், இப்பொழுது உம்மால் என்னைப் புதுப்படைப்பாக ஆக்க முடியும். உமது ஆவியின் குணமளிக்கும் ஆற்றலால் என்னை நிரப்பும்.

என்னில் இருக்கும் தேவையில்லாத எல்லாவற்றையும் அகற்றிவிடும். உடைந்ததை சரிப்படுத்தும், பயனற்ற அணுக்களை மடியச் செய்யும். அடைப்பட்டிருக்கும் இரத்தக் குழாய்களையும், நரம்புகளையும் திறந்துவிடும். பழுதடைந்த பாகங்களைப் புதுப்பித்தருளும். நசிந்த யாவற்றையும் அகற்றி, மாசுபட்ட எதையும் தூய்மையாக்கும். குணமளிக்கும் உமது சக்தியின் அனல், எனது உடலில் ஊடுருவிச் சென்று, நோயுற்ற பாகங்களைக் குணமாக்கட்டும். அதனால், என் உடல் எப்படி செயல்பட வேண்டுமென்று நீர் படைத்தீரோ, அப்படியே அது இயங்கட்டும்.

எனவே தந்தையே , எஞ்சிய என் வாழ்நாளெல்லாம் உமக்குப் பணிபுரிய, எனது உடலும் உள்ளமும், மீண்டும் முழு சுகம் பெறச் செய்வீராக. எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம். ஆமென்.

## தீய ஆவிகளைக் கட்டும் செபம்

இறைஇயேசுவின் நாமத்திலே, காற்று, ஆகாயம், நெருப்பு, நீர், நிலம், இப்பூமி, பாதாளம், கீழுலகம் ஆகிய இயற்கையின் அனைத்து சக்திகளையும் அதிகாரத்தோடு கட்டுப்படுத்துகிறேன். அகில உலக படைப்புகள் அனைத்திற்கும் நீரே ஆண்டவர். உமது படைப்பின் விந்தையை நினைத்து உம்மை மகிமைப்படுத்துகிறேன். தீயோனாகிய சாத்தானின் சூழ்ச்சியால் எங்களையும் எங்களின் குடும்பங்களையும் தாக்கும் அனைத்து தீய சக்திகளையும் உமது பரிசுத்த நாமத்தின் வல்லமையால் கட்டுகிறேன். எங்களை முழுவதும் சிலுவையில் சிந்திய உமது பரிசுத்த இரத்தத்தால் கழுவி உம்மோடு அரவணைத்து பாதுகாப்பீராக.

மரியே, எங்கள் அன்புத்தாயே ! தீயோனாகிய சாத்தானின் தலையை மிதித்து நசுக்கி, எமக்காகவும், எமது குடும்பங்களுக்காகவும் உமது அன்பு மகனாகய இயேசுவின் தூய இதயத்திடம் எமக்காக பரிந்துரைப்பீராக. உமது அன்பின் கவசத்தால் எம்மைப் பாதுகாப்பீராக.

அதிதூதரான தூய மிக்கேலே, எம் காவல்தூதரே, புனித பவுஸ்தினாவே, இப்பூமியில் சுற்றித்திரியும் அனைத்து தீய சக்திகளோடு போரிட்டு எம்மையும், எம் குடும்பங்களையும் பாதுகாப்பீராக.

இயேசுவின் பரிசுத்த நாமத்தின் வல்லமையின் மூலமாக, தூய ஆவியானவரின்தீயினாலே சாத்தானே உன்னை சுட்டெரிக்கிறேன். தூய ஜெபமாலையின் மூலமாக, புனித சூசையப்பர், புனித அந்தோணியார் இவர்கள் இடைக்கச்சையின் வல்லமையாலும், சாத்தானே உன்னை கட்டுகிறேன். உன்னைக்கட்டி ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் காலடிக்கு இழுத்து வருகிறேன். இதோ இப்பொழுதே, சாத்தானின் அனைத்து தீய சக்திகளும், ஏவுதல்களும், எம்மையும், எம் குடும்பங்களையும், நிலபுலங்களையும், விட்டு ஓடுமாறும் உமது வல்லமையின் நாமத்திலே கட்டளையிடுகிறேன்.

இயேசுவே ஆண்டவரே, உமக்கு நன்றி கூறுகிறேன். ஏனெனில், உமது இரத்தத்தினால் நாங்கள் மீட்கப்படுகிறோம். உமது காயங்களால் நாங்கள் குணமடைகின்றோம்.

– ஆமென்

**நித்திய பிதாவாகிய விண்ணகத் தந்தைக்கு நம்மை முழுவதும் அர்ப்பணிக்கும் செபம்**

தந்தையே இறைவா! விண்ணையும் மண்ணையும், காண்பவை காணாதவை யாவையும், படைத்த என் அன்பு தெய்வமே, உமது எளிய ஊழியனாகிய நான், என்னை முழுவதும், என் உடல், ஆன்மா, ஆவி அனைத்தையும் உமக்கு ஒப்புக் கொடுக்கிறேன். உமது திருவுளத்துக்கு என்னை முழுமையாகக் கையளிக்கிறேன். நீர் விரும்பியபடி என்னை உருவாக்குவீராக. உமது திருச்சித்தம் போல் நடக்கவும், செயல்படவும், வாழவும், குறிப்பாக நீர் விரும்பும் இடத்திற்குச் செல்லவும், நீர் விரும்புவதையே செய்யவும், மிகவும் ஆசையாய் இருக்கிறேன். எனது இந்த அர்ப்பண செபத்தை உம் திருமகன் இயேசு கிறிஸ்து வழியாக ஏற்றருள வேண்டுகிறேன்.

– ஆமென்.

**உடல், மனம், ஆன்மா – குணம்பெற செபம்**

என் அன்புத் தந்தையே !‘நாமே உன்னை குணமாக்கும் தேவன்’ என்று வாக்களித்தீரே! எனது நோய் நொடிகளால் துன்புறும் என் உடலையும், கவலையும் குழப்பமும் கொண்ட என் மனதையும், உணர்வுகளையும், உள் மனக் காயங்களையும், பாவ இயல்பு கொண்ட என்னை முழுவதும், உமது அன்பு பாதுகாப்பிலே ஒப்படைக்கிறேன்.

என்னை முழுமையாக குணப்படுத்தும் வல்லமை உம்மிடம் மட்டுமே உள்ளது என உறுதியாக நம்புகிறேன். அன்புத் தந்தையே உம் அன்பிலே என் நம்பிக்கை எல்லாம் வைக்கிறேன். உம்மை நான் இன்னும் அதிகமதிகமாக நேசிக்க உதவியருளும். உம் மீது நான் கொண்டுள்ள என் நம்பிக்கையை மேலும் மேலும் அதிகரித்தருளும்.

என் நோய்களையும், வலிகளையும், வேதனைகளையும் (இங்கு குணம் பெற வேண்டிய தேவைகளைக் குறிப்பிடவும்) உம்மிடமே ஒப்புக் கொடுக்கிறேன். உம் திருமகனின் விலைமதிப்பற்ற திரு இரத்தத்தால் என்னைக் கழுவி என்னைக் குணப்படுத்தும்.

பகைமை, வெறுப்பு, கோபம், உள் மனக் காயங்கள், பேராசை போன்ற அனைத்து தீமைகளையும் தூய்மைப்படுத்தி, எனக்கு விடுதலை அளிப்பீராக. உமது தூய தமத்திருத்துவத்தின் வல்லமை என்னில் செயல்படுவதையும், பாவத்தின் மீது வெற்றி கொள்ளும் ஆற்றலும், பிறரை மன்னிக்கும் மனப்பான்மையும் என்னுள் இருக்கிறது என்பதை நான் உணர்ந்து செயல்படவும், எனக்கு உதவி செய்வீராக. உமது ஆவியினால் என்னை நிரப்பும். உமது அமைதியை என்னுள் குடிகொள்ளச் செய்தருளும்.

– ஆமென்.

**இறைவனடி சேர்ந்த நம் உறவினரை தந்தையிடம் ஒப்படைத்து மன்றாடும் செபம்**

விண்ணகத்திலுள்ள என் அன்புத் தந்தையே இறைவா! உமது திருவடிகளுக்கு வந்துள்ள (...............................) க்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். அவரை இழந்த துயரத்திலே இருந்தாலும், நீர்தாமே அவரை உம்மிடம் அழைத்துள்ளீர் என்ற நம்பிக்கையில் அவரை உம்மிடம் கையளிக்கின்றோம். நீர் அவருக்கு அருளியுள்ள முடிவற்ற விண்ணக வாழ்விற்காக உமக்கு நன்றி கூறுகிறோம். விண்ணகத்தில் அவருக்கு துன்பமோ, துயரமோ, வேதனையோ இல்லை. அவரது இழப்பினால் துயரத்தில் மூழ்கியுள்ள இந்நேரத்தில், எங்களுக்கு ஆறுதலாகவும் பலமாகவும் இருப்பீராக. இவரது மரணத்தினால், நாங்கள் எவ்வித வெறுப்போ கசப்பான உணர்வுகளோ அடையாமல், மாறாக உமது நன்மைத்தனத்தையும், கருணையையும் நினைத்து உமக்கு நன்றி கூறுகிறோம். துயரத்தில் கண்ணீர் வடிக்கும் எம்மைத் தேற்றி என் இதயத்தில் குடிகொள்ளும். அவருடைய வாழ்வு மாறுபடுகிறதே அன்றி முடிந்துவிடவில்லை என்பதையும், ஒரு நாள் விண்ணகத்தில் நாங்கள் மீண்டும் அவரைச் சந்திப்போம் என்ற நம்பிக்கையோடும் நாங்கள் வாழச் செய்தருளும்.

– ஆமென்.

## செபம் செய்வதற்கு முடியாமல் இருக்கும் சூழ்நிலையில் செபிக்கும் செபம்

விண்ணக மண்ணக இறைவனாகிய என் அன்புத் தந்தையே! பாவியாகிய என் மீது இரங்கும். ஆண்டவரே, நாம் உம்மைப் புகழ்ந்து, போற்றி செபிக்க மிகவும் ஆசைப்படுகிறேன். ஆனால் வீண் பராக்குகளாலும், பல்வேறு வகைகளில் என் கவனம் சிதறுவதாலும், என் மனதை உம்மை நோக்கி ஒருமனப்படுத்தி செபிக்க முடியாமல் அல்லல்படுகிறேன். ஓ அன்பு தேவேனே, நீர் என் மீது காட்டிவரும் உமது அளவற்ற அன்பயையும், நன்மைத்தனத்தையும் நினைத்து உமக்கு நன்றி கூறி துதிக்கவும், எனக்கு உதவியருளும். எனது மோசமான பாவ நிலையின் கனாகனத்தை உணர்ந்து திருந்தி “ என் ஆண்டவரே என் மீது இரக்கமாயிரும்” என்று உம்மை நோக்கி மன்றாடும் மனநிலையை அருளும். உமது திருச்சித்தத்தை என்னில் நிறைவேற்ற, உமது அருளும், ஆற்றலும், சக்தியும், மிக மிகத் தேவை என்பதை நான் உணர்ந்து, அதற்காக உருக்கமுடன் நான் உம்மை நோக்கி மன்றாட கற்பித்தருளும்.

ஆமென்

## கடின மனம் கொண்ட பாவிகளுக்காக செபம்

அளவற்ற இரக்கமும் அன்பும் நிறைந்த விண்ணகத் தந்தையே இறைவா, பாவத்தினால் உம்மை விட்டு அகன்று சென்ற உம் பிள்ளைகள் அனைவரையும் தயவுடன் கண்ணோக்கியருளும். உம்திருமகன் இயேசுகிறிஸ்து கெத்சமனித் தோட்டத்தில் பட்ட கொடிய வேதனைகளையும், கற்றூணில் கட்டி சாட்டைகளால் அடிக்கப்பட்ட போது அவர் அடைந்த கொடிய துன்பத்தையும் வேதனைகளையும், முள்முடி சூட்டப்பட்டு, சிலுவையில் அறையப்பட்டு உயிர் துறந்த, விவரிக்க இயலாத அனைத்து கொடிய வேதனைகளையும் பார்த்து, உம் பிள்ளைகளாகிய இந்தப் பாவிகள் மீது உமது இரக்கமும், பரிவும், கனிவும் நிறைந்த பார்வையை திருப்பியருளும். நிலை வாழ்வுக்குச் செல்லும் நேரிய பாதையிலிருந்து தடுமாறி சாத்தானின் பிடியில் சிக்கி, நித்திய நரக அழிவின் பாதை நோக்கிச் செல்லும் ஆன்மாக்கள் மீது மனமிரங்கி காப்பாற்றியருளும். அவர்களது இதயங்களைத் தொட்டு, மனமுருகி அவர்கள் உம்மை நோக்கி மனந்திரும்பச் செய்வீராக. உம்மிடம் அவர்கள் முழுமையாக திரும்பி வர, சாத்தானின் கொடிய கட்டுக்களில்

இருந்து அவர்களை விடுவித்தருளும். இரக்கமும் அன்பும் நிறைந்த தந்தையே, இவ்வாறு அவர்கள் அனைவரும் உமது முடிவில்லா விண்ணக பேரின்ப வீட்டில் உம்மோடு என்றென்றும் முகமுகமாய் உம்மை தரிசிக்கும் பாக்கியத்தை தந்தருளும். என்றென்றும் வாழ்ந்து முடிவில்லா மாட்சியில் ஆட்சி புரியும் ஆண்டவரே.

ஆமென்.